பதிவு எண். M. 6311 ★ தொலைபேசி : 51331 நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம். ஏ. எம்.பி.

மலர் : 16] சென்னை : புரட்டாசி 18 (4—10—68) வெள்ளி ★ வெளியூர் : புரட்டாசி 19 (5—10—68) சனி [இதழ் : 90

## பேராசிரியரின் பேருள்ளம்!

காந்தியார் நூற்றுண்டு விழாத் துவக்க நாளில், கௌஹாத்தி பல்கலைக் கழகத்தின் அரசியல் துறைத் தலைமைப் பேராசிரியரான டாக்டர் வி. வேங்கட ராவ், தம் வாழ்நாளில் சேமித்த ஓர் இலட்சம் ரூபாயையும், இப்பல்கலைக் கழகத்தில் காந்தியாரின் பெயரில் ஓர் அறக் கட்டளையாக எழுதி வைத்துவிட்டார்.

# காந்தி விட்டுச்சென்ற பெரும் பணி

## நிறைவேற்றும் பொறுப்பு நம் மீது சுமந்துள்ளது

### நாட்டு மக்களுக்கு அறிஞர் அண்ணு தரும் செய்தி

சென்னை, அக். 3 —

சென்னை பாலர் அரங்கில் நடைபெற்ற காந்தி நூற்றுண்டுத் தொடக்க விழாவுக்கு அறிஞர் அண்ணு அவர்கள், நியூயார்க்கிலிருந்து அனுப்பியுள்ள செய்தியில், தாம் ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பால் இருப்பதால், விழாவில் கலந்துகொள்ள இயலாதிருப்பதைக் குறிப்பிட்டு, விரைவில் தாயகம் திரும்பிவிடுவேன் என்ற நம்பிக்கையையும் தெரிவித்துள்ளார்கள். செய்தி விவரம் வருமாறு :—

"உரிமையிழந்து -- வாழ்விழந்து கிடந்த நாட்டை உயர்த்தத் தோன்றிய உத்தமர் காந்தியடிகள்!

"களைகிக் கிடந்த சமூகத்தைப் பார்த்துக் கண்ணீர் விட்டு, அதைப் புதுப்பித்துக் கட்ட உறுதி பூண்டு உழைத்தவர்!

"அவர், வாழ்க்கையில் கடைபிடித்துக் காட்டிய தூய்மையும் அன்பும், சமூக உணர்வும் நாட்டுப் பற்றும், தாய்மொழிப் பற்றுமே இன்று நம்மை ஓர் இன மக்களாகப் பிணைத்து, நமக்குள் ஒற்றுமையை வளர்த்து வருகின்றன!

"அவர் இறுதி மூச்சுவரை போராடினர். அந்நியரை எதிர்த்து அவர் நடத்திய போராட்டம்தான் முடிவு பெற்றதே தவிர, தாய்நாட்டு மக்களிடையே மண்டிக் கிடந்த அறியாமையையும், குறுகிய மனப்பான்மையையும், தன்னலத்தையும், சாதி-சமய வேற்றுமையையும் எதிர்த்து அவர் நடத்திய போராட்டம் இன்னும் முற்றுப் பெறவில்லை!

"போர்க் களத்தில் வீர மரணம் எய்தும் மாவீரனைப் போன்று அவர் மறைந்துவிட்டார்! அந்தக் கணத்திலிருந்து அந்தப் போராட்டத்தை அவர் நம்மிடையே விட்டுச் சென்றுள்ளார்!

'அவர் வழி நடந்து -- அவரது தூய உள்ளத்தையும் தொண்டு மனப்பான்மையையும் பெற்று -- ஓயாது உழைத்து -- இந்தப் போராட்டத்தில் நாம் வெற்றி பெறுவது ஒன்றுதான் அவருக்குக் காட்டும் சிறந்த நன்றியாக இருக்குமென நான் கருதுகிறேன்.

'மதுவிலக்கை முழுமூச்சுடன் நிறைவேற்றவும், கிராமத் தொழில்களைச் சிறந்த வகையில் வளர்க்கவும் தமிழக அரசு உறுதிபூண்டு பணியாற்றிவருவது அனைவருக்கும் தெரியும். இதற்கு உறுதுணை நிற்குமாறு நான் தமிழ்ப் பெருமக்களை வேண்டிக்கொள்வதுடன், காந்தியடிகளின் இந்தப் பிறந்த நாள் விழா இதுவரை தமிழகம் கண்டிராத பொலிவோடும், ஏற்றத்தோடும் கொண்டாடப்பட எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்."

## அண்ணுவின் நம்பிக்கை நிறைவேறப் பணியாற்றுவீர்

### சென்னைத் தோழர்கட்கு க. அன்பழகன் வேண்டுகோள்

சென்னை, அக். 4—

"தி. மு. கழகமும், தோழமைக் கட்சிகளும், மாநகராட்சித்தேர்தல் உடன்பாடு கண்டது பற்றி அறிஞர் அண்ணு அவர்கள் மகிழ்ச்சி தெரிவித்திருக்கிருர்கள்; 'சிறந்த வெற்றிபெறுவோம்' என்றும் நம்பிக்கைதெரிவித்திருக்கிருர்கள்.

"வெளிநாடுகளுக்குப் பயணமாகுமுன், நான் ஒரு செய்தி சொல்லுவதானல், 'அண்ணுவின் நம்பிக்கையை நிறைவேற்றிக் காட்டுங்கள்' என்பதே அச்செய்தி ஆகும்.

"'அண்ணுவின் கட்டளையை ஏற்று நடக்கிறேம்' என்ற உணர்வுடன் செயலாற்றுங்கள்! நம் வேட்பாளர் ஒவ்வொருவரும் வெற்றி பெற உழைப்பதை எல்லாத் தோழர்களும் தங்கள் கடமையெனக்கருதவேண்டும்"

என்று பேராசிரியர் க. அன்பழகன் எம்.பி. அவர்கள், எழும்பூரில் நடைபெற்ற வழியனுப்பு விழாக் கூட்டத்தில் உரையாற்றுகையில் கேட்டுக்கொண்டார்.

## 106-வது வட்டக் கழக வேட்பாளர்

★

சென்னை 106-வது வட்டத்தில் (இராஜாஜி நகர்) கழக வேட்பாளராகத் தோழர்

**பி. கே. முத்துராமலிங்கம்**

போட்டியிடுவார்.

இரா. நெடுஞ்செழியன்
தலைவர், ஆட்சிமன்றக் குழு

### அண்ணுவுடன் இரா. செழியன்



நியூயார்க் மருத்துவ மனையில் அறிஞர் அண்ணு அவர்களுடன் திரு. செழியன் அவர்கள் உரையாடிக்கொண்டிருக்கும் காட்சி

## கூடுதலாகச் சர்க்கரை கிடைக்கும்

சென்னை, அக். 4—

சென்னை நகரில் பங்கீட்டுக் கார்டு உள்ளவர்களுக்குத் தீபாவளியின்போது கூடுதலாகச் சர்க்கரை கிடைக்கும்.

பங்கீட்டுக் கார்டில் தொடக்கத்தில் பதியப்பட்ட அளவின்படி, 2 கிலோவும் அதற்குக் குறைவாகவும் பெறுவோருக்கு அரை கிலோவும்; 2 முதல் 9 கிலோ வரையில் பெறுவோருக்கு 1 கிலோவும்; 9 கிலோவுக்கு மேல் பெறுவோருக்கு 2 கிலோவும் கூடுதலாக வழங்கப்படும்.

"வெளியூர்களிலும் ஏதாவது கூடுதலாகத் தருமாறு மாவட்டக் கலெக்டர்களுக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது"

என்று உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன், செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

### உறுதியோ முறையோ இல்லாதவர்கள்...

"உறுதியோ, நடத்தை முறையோ இல்லாதவர், 'திசை திருப்பி' இல்லாத கப்பலுக்குச் சமமானவர்!"

—காந்தியார்.

## அண்ணனுக்குத் தம்பி ஆற்ற வேண்டிய கடமை

"வேட்பாளர் பட்டியலிலே இடம் -- இன்றைக்கு இல்லாவிட்டால் நாளைக்கு -- நாளை தவறினல் மறுநாள் -- என்றேனும் ஒரு நாள் கிடைத்திடக்கூடும்.

'அண்ணனுக்குத் தம்பி என்ற பட்டியலிலே -- அதாவது கழக அமைப்புப் பட்டியலிலே -- இருந்து பெயர் எடுக்கப்பட்டுவிட்டால், காலாகாலத்திற்கும் களங்கம் விடாது!

"படுக்கையில் இருக்கும் பாசமுள்ள அண்ணனுக்கு ஆற்றிட வேண்டிய கடமையை ஆற்றவில்லை -- என்ற மாசு மறைபவே மறையாது! இந்த அன்புக குடும்பத்தில், அந்த அவசரக்காரர்களுக்கு மன்னிப்பே இல்லாமல் போய்விடக்கூடும்!

"நீயும் போட்டி போடு -- சுயேச்சையாக' எனத் தூண்டிவிடுவோர் வருவர்! சிண்டு முடிவோர் எழுவர்! நீ அதற்கு இடமளிக்கமாட்டாய் -- தெரியும்! நீ, பதவிக்காக அண்ணனிடம் பாசம் வைத்தவனல்ல -- 'அவருக்குத் தம்பியாக இருப்பதே பெரிய பதவி' என எண்ணிடுபவன்!

'பத்துப் பேர் இடம் கேட்டால் ஒருவருக்குத்தான் வாய்ப்பளிக்க முடியும் -- ஒன்பது பேரை விடத்தான் நேரிடும்! எந்த ஒருவருக்கு இடமளிக்கப்பட்டாலும், ஏனைய ஒன்பது பேர் அதிருப்தியடையவே செய்வர்!

"இந்தச் சூழ்நிலையில், தலைமைக் கழகத்தினரின் நெருக்கடியை எண்ணிப் பார்! நீயே தலைமைக் கழகமாக இருந்து யோசித்துப் பார்!"

—'முரசொலி' : மறவன் மடலில் (4—10—68)

# இருள் சூழ்ந்திருந்த நாட்களில் ஏற்றி வைத்த தீபம்!

உலகத் தலைவர்கள் பலரை அறிந்துகொள்வதற்கும், அறிவாற்றல் படைத்த பலருக்குக் கீழ் அலுவல் புரிவதற்கும் எனது வாழ்க்கையில் நல்ல வேளையாக எனக்கு வாய்ப்புக் கிடைத்தது!

இந்த நீண்ட பட்டியலில், உண்மையிலேயே மிகப் பெரிய மனிதர்களென்று தயக்கமின்றி ஒரு சிலரைத் குறிப்பிடலாம்.

இந்த மிகச் சிறிய பட்டியலில் காந்தியார் பெயர் — நமது காலத்தின் மாமனிதருள் ஒருவரின் பெயர் இடம் பெறுகிறது!

நம்முன் இருக்கும் இருள் சூழ்ந்த -- சிரமங்கள் நிறைந்த நாட்களில் அவரது வாழ்க்கை ஏற்றிவைத்த 'தீபம்' தொடர்ந்து ஒளிவிட்டு மிளிர்கிறது!

கொடுமைக்கு உட்பட்டவர்களின் இன்னல்களைப் புரிந்துகொள்ளும் சிறப்பு அவருக்கு இருந்தது! உண்மை எங்கிருந்தாலும், அதை நாடும் இயல்பு கொண்டவர் அவர்! உள்ளத்தின் மாற்றத்தைவிட உணர்ச்சியின் மாற்றம்தான் அதிக முக்கியமானது என்று அவர் கருதினர்! அனடோல் பிரான்ஸ் என்பவர் கூறியதைப்போல், அவர், 'மனித மனச்சான்றின் ஒரு மாபெரும் சக்தி'யாக விளங்கினர்!

**மவுண்ட் பேட்டன் பிரபு**

காந்தியார் வாழ்நாளின் கடைசிக் கட்டத்தில்—அரசியல் துறையில் அவரது ஆற்றல் குறையத் துவங்கிய காலத்தில்—பெரும் பொறுப்பு ஏற்கவேண்டிய துறைகளில் முன்னணியிலிருந்து அவர் விலகத் துவங்கிய காலத்தில்தான் நான் அவருடன் தொடர்பு கொள்ள நேர்ந்தது.

ஆட்சி மாற்றத்தில் இருந்த 'பிரிவினை' எனும் தவிர்க்க முடியாத அம்சம், அவரது வாழ்க்கை நோக்கங்களையும், எண்ணங்களையும் பொறுத்தவரை துயர் தரும் ஏமாற்றமாக இருந்தது. அவரைப் பொறுத்தவரையில், 'வெற்றி கிட்டியது' என்பதைவிட, எதையோ வெட்டி விட்டதாகவே தோன்றியது.

ஓரளவுச்குக் கிரகணம் போன்ற அந்தச் சூழ்நிலையில், ஒளிமங்கிய தோற்றத்தை அவர் விட்டுச் சென்றதாகத்தான் மற்றவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். ஆனல், நானும் எனது மனைவியும் அவரை முதல் தடவையாகச் சந்தித்தபோதே, 'இவர் ஒரு தனிப் பெரும் மனிதர்' என்பதை அறிந்துகொண்டோம்; தலைவர்களின் சாதாரண எல்லைகளுக்கு அப்பாற்பட்டவர் என்பதையும், நொடிப் பொழுதில் ஓர் உண்மை நண்பராகக்கூடியவர் என்பதையும் உணர்ந்து கொண்டோம்.

அவரது வாழ்க்கையின் கடைசி ஆண்டில் நடந்த மாபெரும் நிகழ்ச்சிகளில் அவர் வகித்த பங்கு, இப்போது, வரலாற்றின் ஒரு பகுதியாகிவிட்டது. அவர் தமது கடமை என்ன என்பதை நன்கு உணர்ந்திருந்தார்; ஏதோ பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்வதோடு நிறுத்திவிடாமல், அதற்கும் அப்பாற்பட்டு ஒரு கடமை இருந்ததை அவர் உணர்ந்தார். வகுப்பு வெறி சமூகத்தையே ஆட்கொள்ளக்கூடிய அபாயம் இருந்தபோது அவர், தமது மாபெரும் செல்வாக்கை மக்களிடம் வெற்றிகரமாகச் செலுத்தினர்.

1947 ஆகஸ்டு மாதத்தில் கல்கத்தா மைதானத்தில் அவர் பங்குகொண்ட சம்பவம், இந்த நூற்றுண்டின் மாபெரும் நிகழ்ச்சிகளுள் ஒன்ருகும் என்றும், அவரது சொந்த ஆற்றலினல் அந்த அற்புதத்தை நிகழ்த்தினர் என்றும் சொன்னல் அது மிகையாது.

மக்கள் கூட்டத்தின் மனேதத்துவத்தை ஆராய்பவர்களுக்கு இது ஒரு அனுபவபூர்வ உண்மை. உணர்ச்சி பொங்கக் கையில் கத்தியுடன் இருந்த இலட்சக்கணக்கான மக்களின் உள்ளத்தை மாற்றினர்; 'இரத்தம் சிந்த வைத்துப் பழிக்குப் பழி வாங்கவேண்டும்' என்ற எண்ணத்துடன் வந்தவர்களை, அவர்களது கட்டுக்குட்பட்ட காந்தி அன்பைப் பயன்படுத்தி-- அதைச் செலுத்தி -- சகோதர உணர்வை அறியச் செய்தார்!

'மகாத்மா' என்ற முறையில் அவரது ஆற்றல் வெளிப்பட்டதைத்தான் இங்கு காண்கிரேம்; இது அரசியல் அதிகாரத்துக்கு அப்பாற்பட்டது; தனிப்பட்ட முறையில் துணிச்சலுடன் பொறுப்பு ஏற்கும் சக்திதான் இதில் முக்கியமான அம்சம்.

மற்றவர்களது காயம் குணமடைய உதவிபுரியும்வகையில், இறுதியில் அவர் கொலையுண்டு தமது வாழ்வையே அர்ப்பணித்துத் தியாகியானர்!

'அவரது வாழ்க்கையின் பொருள் மகத்தானது' என்பதை, அவர் மரணத்தில் கண்டோம்! யமுனை நதிக்கரையில் அவருக்கு இறுதி மரியாதை செலுத்தும் பொருட்டு மக்கள் பல்லாயிரக் கணக்கில் வந்தார்கள்; பலவீனமான அவரது உடலை நெருப்பு சாம்பலாக்கிக்கொண்டிருந்த போது, 'அமரர் காந்தி' எனும் முழக்கம் வானைப் பிளந்தது!

அது, வெற்றியின் முழக்கம்! அந்தக் காட்சியை நான் ஒரு நாளும் மறக்கமாட்டேன்!

காந்தி எவ்வாறு இப்படி ஒரு மாமனிதராக வாழ்ந்தார் என்று நான் அதற்குப் பிறகு பல தடவை சிந்தித்துப் பார்த்ததுண்டு! அவரது மரணத்தின் அதிர்ச்சி அலைகள், கடல்கடந்து உலகெங்கிலும் பரவின!

'இருபதாம் நூற்றுண்டின் போக்குக்கு அவர் ஓர் அறைகூவலாக இருந்தார் என்பதுதான் அவரது வெற்றியின் இரகசியம்' என்று நான் கருதுகிறேன். இது, 'வன்முறை யுகம்' என்று தெரியாமலா சொன்னர்கள்? பொருள் ஈட்டும் பொருட்டுத் தனிப்பட்ட நிர்ப்பந்தங்களையும், பொது நிர்ப்பந்தங்களையும் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு எல்லா 'உத்தி'களையும் கையாளும் யுகம் இது!

காந்தியார் உண்மையான முறையில் இந்த அறைகூவலை ஏற்றுக் கொண்டார் என்று உலகம் உணர்ந்ததாகவே நான கருதுகிறேன்.

'வன்முறையை அகிம்சையால் எதிர்ப்பது' என்ற அவரது தத்துவம், ஏதோ மனக்கோட்டை கட்டுபவரின் கற்பனையாக இருக்கவில்லை!

அவர், பிரச்சினையின் மையத்திற்கே சென்ருர்! தனி மனிதனின் நடத்தைக்கும் ஆசைக்கும் அழைப்பு விடுத்தார்! தமக்குத் தாமே விதித்துக்கொண்ட கட்டுப்பாட்டைப் பின்பற்றினர்! இது இல்லாமல் இருந்தால் எவ்வளவு நவீனமாக இருப்பினும், நாகரிகம் இறுதியில் தகர்ந்து விடும்!

அவரது நாட்டின் மிகப் பயங்கர பிரச்சினைகளை அவர், தமக்கே உரிய தனி வழியில் அணுகியதால் மட்டுமன்றி, அவர் எப்போதும் நிலையாக இருந்ததால்தான் உலகின் கவனத்தை ஈர்ந்தார்! உலகின் மதிப்பைப் பெற்ருர்!

## 'ஊழலை ஒழித்து நிர்வாகத்தை செம்மைப்படுத்துவோம்'

## 'தாழ்த்தப்பட்டோர் முன்னேறுவதற்குத் தனி வசதி அளிப்போம்'

### பஞ்சாப் வாக்காளர்கட்கு அகாலி தளக் கட்சியின் உறுதிமொழி

பட்டாலா (பஞ்சாப்), அக். 3—

நடைபெறவிருக்கும் பஞ்சாப் சட்டமன்றத்திற்கான இடைத் தேர்தலில் போட்டியிடவிருக்கும் அகாலி தளம், தனது தேர்தல் அறிக்கையைத் தயாரித்து வெளியிட்டிருக்கிறது.

நிர்வாகத்தில் ஊழலையும், திறமைக் குறைவையும் ஒழித்து விடுவதாக அதில் உறுதி கூறப்பட்டிருக்கிறது.

மேலும், தாழ்த்தப்பட்டோரின் வாழ்க்கை நிலையைச் செம்மைப் படுத்தவும், அவர்களின் பொருளாதார நிலைமையை உயர்த்தவும், கல்வித்துறையில் அவர்களுக்குத் தனி வசதிகள் செய்து தரவும் பாடுபடப்போவதாக அதில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

உணவு உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்தோடு விவசாயிகளின் தேவையை நிறைவேற்றும் பணிகளுக்கு முதலிடம் தருவதாகவும் உறுதிமொழி தரப்பட்டுள்ளது.

## சகிப்புத் தன்மை இன்றேல் இயலாது!

"உண்மையான சனநாயக உணர்வை நாம் வளர்க்க விரும்பினல், சகிப்புத்தன்மை இல்லாமல் இருக்க முடியாது."

—மகாத்மா காந்தி

## கப்பல் போக்குவரத்து

### சீன--பாகிஸ்தானுக்கிடையே நடைபெறும் சாத்தியக்கூறு?

புதுடில்லி, அக். 3—

"பாகிஸ்தானும்— சீனவும் தத்தம் நாடுகளுக்கிடையே கப்பல் போக்குவரத்தை அதிகரிக்கும் சாத்தியக்கூறுகள் குறித்து ஆராய்ந்துவருகின்றன" என்று பாகிஸ்தான் வானெலி, தகவல் வெளியிட்டிருக்கிறது.

# உலகிற்கே அற நெறி காட்டிய உத்தமர்!

ஐ. நா. பொதுச்செயலாளர்

**ஊ - தாண்ட்**

"சமூக நல முன்னேற்றத்தை அதிகமாக்கி -- வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி மேலும் சுதந்திரம் வழங்க வேண்டும்" என்று ஐ. நா. பட்டயம் கூறுகிறது.

அடிப்படை மனித உரிமைகளிலும், மனித கௌரவத்திலும், மதிப்பிலும், ஆண்களுக்கும் பெண்களுக்கும் -- சிறிய நாடுகளுக்கும் பெரிய நாடுகளுக்கும் சம உரிமைகள் கொடுக்க வேண்டும் என்பதிலும் உள்ள நம்பிக்கையை ஐ. நா. பட்டயம் வலியுறுத்துகிறது.

எந்த ஒரு நாடும் மற்றெரு நாட்டின் சொல்படி நடக்க வேண்டாம் என்ற நிலைமை உள்ள ஓர் உலகை உருவாக்குவதுதான் ஐ. நா. பட்டயம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

"படைபலத்தைக் காட்டி மிரட்டவோ, படைபலத்தைக் பயன்படுத்தவோ கூடாது" என்று அந்தப் பட்டயம் கூறுகிறது.

மனித கௌரவத்தையும், மதிப்பையும் வலியுறுத்துவதற்காகத்தான் காந்தியடிகள் இந்த நூற்ருண்டின் துவக்கத்தில் தென் ஆப்பிரிக்காவில் அறப் போரைத் துவக்கினர்.

காந்தியை அகிம்சையின் தூதராகக் கருதுகிரேம்; அநேகமாக எல்லாச் சிறந்த சமயங்களுக்கும் இதுதான் அடிப்படைத் தத்துவம். எனது சொந்தச் சமயமான புத்த சமயத்துக்கும் அகிம்சைதான் அடிப்படை நெறிகளுள் ஒன்று; சகிப்புத் தன்மை இல்லாமை -- வன்முறை -- கொடுமை ஆகியவை புத்த சமயத்தில் கிடையாது.

முக்கியமான இடங்களில் அகிம்சை முறைகளைப் பயன்படுத்தினல், வன்முறையால் கிடைப்பதைவிட அதிகப் பலன் கிடைக்கும் என்று காந்தி நம்பினர்.

"ஒரு நோக்கம் எவ்வளவு முக்கியமானதோ, அந்த அளவுக்கு அதை அடைவதற்கான வழியும் முக்கியமானது என்பதால், அமைதி வழியில்தான் பலன் அடைய வேண்டும்" என்று அவர் கருதினர்.

"வழி எப்படியிருந்தாலும், அடையும் நோக்கமதான் முக்கியமானது" என்று பலர் கூறக் கேட்கிரேம்; இதை, காநதி திட்டவட்டமாக நிராகரித்தார்; 'கௌரவமான ஒரு நோககத்தை, கௌரவமற்ற வழியில் அடையமுடியாது' என்று அவர் கருதினர். அவரைப் பொறுத்தவரையில், நோக்கமும் அதை அடைவதற்கான வழியும் இரண்டறக் கலந்தவை. 'நோக்கத்தை அடைவதற்கான வழியை அந்த நோக்கம் மேலும் புனிதமாக்குகிறது' என்றும, 'அந்த நோக்கததைக் காட்டி நாம் பின்பற்றிய வழி சரியானது என்று நியாயம் பேசுவது முறையல்ல' என்றும் அவர் எண்ணினர்.

ஐ. நா. பட்டயத்தின் நோக்கங்களை அடைவதறகான முயற்சியில் ஐ. நா.-ல் உள்ள நாம் அனைவரும் இந்தச் சிறந்த சிந்தனையைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

ஆங்கில ஆதிக்கத்திலிருந்து இந்தியா விடுதலை பெறும் பொருட்டு வெற்றிகரமாகக் காந்தியார், அறப்போராட்ட முறையை -- அகிம்சை முறையைக் கையாண்டு நிர்பந்தம் செலுத்தினர். இந்தியாவின் அரசியல் விடுதலைக்கு அவர் எந்த அளவுக்கு முக்கியத்துவம் கொடுத்திருந்தாரோ, அந்த அளவுக்கு இந்தியாவில் உள்ள சமூகத் தீங்குகளை அகற்றும் பணிக்கும் முக்கியத்துவம் கொடுத்திருந்தார்.

உண்மையில் அவர், தென்னிந்தியாவில் ஒரு கிராமத்தில் தீண்டாமையை அகற்றும் நோக்கத்தோடுதான், துவக்கத்தில், 'சத்யாக்கிரக' முறையைப் பயன்படுத்தினர். இவ்வாருகக் காந்தியார், மனிதனின் கௌரவத்தையும், மதிப்பையும் வலியுறுத்தினர்.

'சாதியையோ, இனத்தையோ பொருட்படுத்தாது, எல்லா மனிதர்களுக்கும் சமத்துவம் அளிக்க வேண்டும்' என்ற நெறியை வலியுறுத்தினர். இந்தியாவில் சமூக நீதியை ஏற்படுத்துவதற்கான முயற்சி மகாத்மா காந்தி இடைவிடாது ஈடுபட்டுவந்த ஒன்ருகும்.

அகிம்சையின் தூதர் ஒரு கொலையாளியின் தீயச் செயலினல் மரணமுற்றதை, 'விதியின் விளையாட்டு' என்றல்லாமல் வேறு என்ன சொல்வது?

வாழ்நாள் முழுவதும் அமைதிக்காகவே பாடுபட்டு வந்த ஒரு மனிதர், வன்முறைச் செயலினல் மரணம் அடைந்தது இதுவல்ல முதல் தடவை; 'இது கடைசித் தடவையாக இருக்கும்' என்றுகூடச் சொல்ல முடியாத நிலையில் இருக்கிறேன்.

ஆனல், அகிம்சைத் தத்துவமும் அமைதியான மாறுதலின் தேவையும் பொய்த்துப்போய் விட்டதாக இதற்குப் பொருளில்லை. நேர்மாருக, அகிம்சையின் சிறப்பைத்தான் இது வலியுறுத்துகிறது; ஏனென்ருல், வன்முறை வழிகளைப் பின்பற்றுவோர், அகிம்சைத் தூதர் ஒருவரின் வாழ்வை முடிப்பதற்குக்கூட வன்முறையைத்தான் நாட வேண்டியிருக்கிறது.

இந்த வன்முறைக்காரர்கள் தங்களது வழிகளைப் பின்பற்றுமாறு மக்களின மனத்தை மாற்ற முடியாததுதான் இதற்குக் காரணம். வரலாற்றுச் சம்பவங்கள் ஒரு தடவையோடு நின்றுவிடுவதில்லை; மீண்டும் மீண்டும் நிகழ்கின்றன.

அண்மையில் மார்ட்டின் லூதர் கிங் கொல்லப்பட்டதும் இத்தகைய முறையைச் சேர்ந்ததாகும்.

'வன்முறை, மற்றெரு வன்முறைச் செயலைத் தூண்டிவிடுகிறது' என்று உலக மக்கள் உணர்ந்திருப்பது, அகிம்சையின் மதிப்பை உயர்த்துகிறது.

காந்தியின் தத்துவம் -- என்னைப் பொறுத்தவரையில் -- அவரது நாட்டுக்கு மட்டுமோ, அவர் வாழ்ந்த காலத்துக்கு மட்டுமோ உரியது அல்ல; அதற்கும் அப்பாற்பட்டு பொருளும் முக்கியத்துவமும் கொண்டது.

அவரது தத்துவங்களில் பல உலகெங்கிலும் பின்பற்றக்கூடியவை -- சாசுவதமானவை.

இந்தியாவில் அவரது வாழ்நாளில் அகிம்சை நிர்ப்பந்த முறைகள் எந்த அளவுக்கு உதவி புரிந்தனவோ அந்த அளவுக்கு உலகெங்கிலும் இன்று அமைதி முறையில் மாறுதல்களை ஏற்படுத்துவதற்கு அத்தகைய அகிம்சை நிர்ப்பந்தங்கள் உதவி புரியும் என்பதை காலம் மெய்ப்பிக்கும் என்று நம்புகிறேன்.

—(புதுடில்லி காந்தி அமைதி நிறுவனம் வெளியிட்டுள்ள 'மகாத்மா காந்தி -- 100 ஆண்டுகள்' என்னும் புத்தகத்திலிருந்து.)

# ‘எல்லோருக்கும் பலன் கிட்டும் திட்டங்களைத் தீட்டுக’

## பதவியேற்றதும் அறிஞர் அண்ணா இட்ட கட்டளை

### அனுமதிக்காது!

“வன்முறைச் செயலிலோ, கொள்ளையடிப்பதிலோ, தீ வைப்பதிலோ ஈடுபடுவதை, சத்தியாக்கிரகம் அனுமதிக்காது.”

—மகாத்மா காந்தி

### பயனுள்ளதாக இருக்க வேண்டுமானல்!

“சமூக சேவை பயனுள்ளதாக இருக்க வேண்டுமானல், அதைச் சத்தம் போடாமல் செய்ய வேண்டும்.”

—மகாத்மா காந்தி

### அனாதைக் குழந்தைகளுக்கு ஆடைகள் வழங்கி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் விளக்கம்

சென்னை, செப். 30—

“அமைச்சரவை அமைந்ததும் எங்களை எல்லாம் அழைத்து அண்ணா அவர்கள், ‘நீங்கள் போடக்கூடிய எந்த ஒரு திட்டமும் இரண்டுபேர் உல்லாசத்துக்கும், மூன்றுபேர்களின் வசதிக்காகவும் உருவானதாக இருக்கக்கூடாது; அந்தத் திட்டங்கள்மூலம் குறைந்தது இலட்சம் மக்களாவது பயனடைவதாக இருக்க வேண்டும்; பரவலாக ஏற்பட்டு ஏழை எளிய பாட்டாளிகளும், குடியானவர்களும் பயனடைவதாக இருக்கவேண்டும்; உங்கள் சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு இடமளிக்காமல், ‘பலன் சேர வேண்டியவர்களுக்குப் போய்ச் சேருகின்றதா’ என்பதைக் கவனிக்க வேண்டும் என அறிவுறுத்தினர்”

இவ்வாறு கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள், அடையாறு அவ்வை இல்லத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 2,121 அனாதைச் சிறுவர்களுக்குப் புத்தாடை வழங்கிப் பேசுகையில் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது :—

கோவை ஆலை அதிபர் நண்பர் சோமசுந்தரம், இந்தப் புத்தாடைகளை என்னிடம் கொடுத்து, ‘அறிஞர் அண்ணா அவர்களது பிறந்த நாளையொட்டி யாருக்கேனும் இவற்றைக் கொடுங்கள்’ என்றார்; அனாதைக் குழந்தைகளுக்கும், ஊனமுற்ற பிள்ளைகளுக்கும் இவை கிடைக்க வேண்டும்’ என்று நான் கருதினேன்; இந்த விழாவுக்கு ஏற்பாடு செய்யும்படிக் கேட்டுக்கொண்டேன்.

திக்கற்ற பிள்ளைகளுக்கு இவ்வாறு புத்தாடை கிடைப்பது அண்ணா அவர்களுக்கு மிகவும் பிடிக்கும்.

எவரும் எதையும் பெற்றுவிடலாம்; ஆனல் மற்றவர் இதயத்தில் இடம்பெறுவது கடினம். ஆனல் அறிஞர் அண்ணா அவர்கள், கோடிக்கணக்கானவர் உள்ளங்களில் இடம்பெற்றிருக்கிறார்கள்! ‘எழுத்திலும் பேச்சிலும் இந்தியாவிலேயே இவரைப் போல இல்லை’ என்று சொல்லும் அளவுக்குத் தம் எழுத்தாற்றலால் புகழ்பெற்றிருக்கிறார் அண்ணா. எத்தனைப் புகழ் வரினும் எளிமையோடு பழகி எல்லோரிடத்திலும் அன்பு செலுத்துகிறார்.

‘திக்கற்றவர்கள், புறக்கணிக்கப்பட்டவர்கள் வாழ்வுபெற வேண்டும்’ என்பதில் அண்ணா உன்னிப்பாக இருக்கிறார்.

மனித குலம்பற்றி எவ்வளவோ பெருமை பேசினாலும் நடைமுறையில் அந்தப் பெருமை நிலைநாட்டப்படுவதில்லை.

“ஏட்டில் கருத்துக்கள் அழகாக எழுதியிருந்தால் போதாது; வாழ்க்கையில் அவை எதிரொலித்திட வேண்டுவது முக்கியம்” என்று அறிஞர் அண்ணா அவர்கள் சொல்லியிருக்கிறார்; ஒழுக்கமும் அறிவும் நம சிந்தனையில -- சொல்லில் -- செயலில் காணப்பட வேண்டும்.

வேறு பல அறங்களைக் காட்டிலும் இப்படித் திக்கற்றோருக்கு உதவும் அறம் மேலானது.

சில கல்வி நிலையங்கள் வியாபார நோக்குடன் நடத்தப்படுகின்றன; அத்தகைய போக்கு இங்கெல்லாம் கிடையாது. நான்கு பேர் தவறிழைப்பதால் தொண்ணூற்றாறுபேர் பாதிக்கப்படுகிறார்கள்; இதனால்தான் அரசு, ‘கணக்கு -- தணிக்கை’ என்றெல்லாம் வைத்துள்ளது. இதையும் மீறித் தவறுகள் நடக்கின்றன. எனினும், பொதுவில் கல்வி நிலையங்களுக்கான உதவித் தொகை உயர்த்தப்பட அரசு தன்னாலான முயற்சிகளை மேற்கொள்ளும்.

கண்பார்வை அற்றவர்கள், காது கேளாதவர்கள், ஊமையராயிருப்போர் தங்களது குறைபாட்டை உணராவண்ணம் ஆளாக்கப்படுவதென்பது பெரும் காரியமாகும். இத்தகையவர்கள், ‘நமக்கு எத்தகைய குறையுமில்லை’ என்று எண்ணும்படி நிறைபாடுடையோர் பணியாற்றினால், நாடும் சமுதாயமும் நிம்மதி பெறும்!

### தொழிலாளர்கட்கான அரசு இன்சூரன்சுத் திட்டம்

#### தமிழகத்தில் 2,98,337 பேர் பயன்பெறுகின்றனர்

தொழிலாளர்களுக்கான அரசாங்க இன்சூரன்சுத் திட்டம், தமிழ்நாட்டில் 31 இடங்களில் செயல்படுத்தப்படுகிறது.

நோயாலும், விபத்தாலும் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் இத்திட்டத்தால் பயன்பெறுகின்றனர்.

பேறுகால உதவியும் பெண் தொழிலாளர்களுக்கு அளிக்கப்படுகிறது.

இத்திட்டத்தால் 2,98,327 தொழிலாளர்கள் பாதுகாப்புப் பெற்றுள்ளனர்.

பண உதவியைப் பட்டுவாடா செய்வதற்காக மாநிலத்தில் 54 அலுவலகங்கள் இயங்கி வருகின்றன.

1968 ஜூன் மாதத்தில் 2,855 தொழிலாளர்களுக்கு விபத்துக் காரணமாக ரூ. 1,65,014.20 பண உதவி அளிக்கப்பட்டது; நிரந்தரமாக ஊனமடைந்து ‘பென்ஷன்’ வழங்கப்பட்ட 509 பேர்களும், இறந்துபோன இன்சூர் நபர்களைச் சார்ந்த 165 பேர்களும் உதவி பெற்றவர்களில் அடங்குவர்.

இந்த மாதத்தில் 2,258 விபத்துக்கள் ஏற்பட்டன. தொழில் செய்யும்பொழுது காயமடைந்ததால் உதவி கேட்பவர்கள் குறைவாகவும், நோயுற்றதால் பண உதவி கேட்பவர்கள் அதிகமாகவும் இருந்தார்கள்.

இந்த மாதத்தில், நோயுற்றதால் உதவி கேட்டு 55,567 கோரிக்கைகள் வந்தன: மருத்துவ உதவித் தொகையாக ரூ. 10,91,914.55 அளிக்கப்பட்டது.

வேலைக்கு வராத நாட்களின் எண்ணிக்கை 3,20,316 ஆக இருந்தது.

180 பெண் தொழிலாளர்கள் ரூ. 48,523.13 பேறுகால உதவி பெற்றனர்.

தொழிலதிபர்கள் ரூ. 33,808.46 பங்குத் தொகை செலுத்தாததற்காக 27 வழக்குகளில் சட்ட நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டது.

### அசாம் ஆளுநர் அறிவிப்பு

நடைமுறையிலிருக்கும் ‘போர் நிறுத்த ஒப்பந்த’த்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்கப் போவதாக அசாம—நாகாலாந்து ஆளுநர் அறிவித்திருக்கிறார்.


சிசர்ஸ் போட்டியில் சேருங்கள்—

‘முகச்சாயலைப் பார்த்து நட்சத்திரங்களின் பெயர்களைக் கூறும்’

பெறுவீர்

ரூ. 30,000

முதல் பரிசு ரூ. 19,000
2வது பரிசு ரூ. 8,000
3வது பரிசு ரூ. 3,000

நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் இதுதான்:

நீங்கள் பார்க்கும் 10 முகச்சாயல்களும் பிரபல இந்திய திரைப்பட நட்சத்திரங்களினுடையவை. ‘‘இதை விடை அனுப்பும் பாரமாக உபயோகிக்கவும்’’ என்று குறிப்பிடப்பட்டுள்ள கட்டத்தில் 1-ம் நம்பருக்கு எதிராக 1 என்று குறிப்பிடப்பட்டுள்ள முகச்சாயலைக் கொண்ட நட்சத்திரத்தின் பெயரை எழுதுங்கள். (உதாரணம்: முகச்சாயல் 1 ‘விமி’யினுடையது என்று நீங்கள் நினைத்தால் கட்டத்தில் 1-ம் நம்பருக்கு எதிராக ‘விமி’ என்று எழுதுங்கள்.) இவ்விதமாகவே 1 முதல் 10 வரை எல்லா காலி இடங்களையும் பூர்த்தி செய்யுங்கள். பிறகு கோரப்படும் இதர விவரங்களையும் பூர்த்தி செய்து, 5 (ஐந்து) காலி சிசர்ஸ் சிகரெட் பாக்கெட்டுகளையும் சேர்த்து முற்றிலும் பூர்த்தி செய்யப்பட்ட விடை பாரத்தை கொடுக்கப்பட்டுள்ள முகவரிகளில் ஏதாவதொன்றுக்கு அனுப்புங்கள். 40 திரைப்பட நட்சத்திரங்களின் பெயர் பட்டியலை நாங்கள் கொடுத்துள்ளோம். இங்கு கொடுக்கப்பட்டுள்ள முகச்சாயல்கள் இந்தப் பட்டியலிலுள்ள 10 திரைப்பட நட்சத்திரங்களினுடையவை.

திரைப்பட நட்சத்திரங்களின் பெயர்கள்:

சுஜித் குமார், தேவ் ஆனந்த், அச்லா சச்தேவ், ஆகா, சஞ்ஜய், ஆஷா பரேக், நிருபராய், மீனா குமாரி, சஷிகலா, ஷார்மிளா டாகுர், மதுமதி, பிரேம் சோப்ரா, அஸ்ரா, பர்யால், சாயிதா கான், பிஸ்வஜித், ஜெய்சங்கர், ஹர்நாத், பி.காஞ்சனா, வஹிதா ரஹ்மான், மாலா சின்ஹா, அஞ்சு மகேந்திரு, சஷிகபூர், சைரா பானு, பிரோஸ் கான், இந்திராணி முக்கர்ஜி, சிமி, காமினி கௌசல், விமி, நாஜ், பபிதா, மும்தாஜ், ஸோனியா சாஹ்னி, ஜெப் ரஹ்மான், பிரான், எம். ராஜஸ்ரீ, கே. விஜய நிர்மலா, கிருஷ்ணா, ஏ.வி.எம் ராஜன், வாணிஸ்ரீ.

முக்கிய விதிகள்: இப்போட்டியில் கலந்து கொள்ளும் ஒருவர் எத்தனை விடைகள் அனுப்பியிருந்தாலும் எந்தச் சூழ்நிலையிலும் அவர் ஒரு பரிசுக்குமேல் பெறுவதற்கு தகுதியுடையவராகார். சரியான விடை பத்திரிகைகளில் வெளியிடப்படும். இந்தப் போட்டியில் இந்தியாவில் வசிக்கும் 18 வயதுக்கு மேற்பட்ட இந்தியப் பிரஜைகள் மட்டுமே கலந்து கொள்ளலாம்.

சிகரெட் கடைகளில் கிடைக்கும் விடை அனுப்பும் பாரங்களில் முழு விதி, நிபந்தனைகளும் கொடுக்கப்பட்டுள்ளன.







முடிவு தேதி நவம்பர் 15, 1968 வரை நீடிக்கப்பட்டு உள்ளது.




சிசர்ஸ் சிகரெட்டுகள் தயாரிப்பவர்களால் நடத்தப்படுகிறது.

இங்கே கத்தரிக்கவும்

இதை விடை அனுப்புவதற்கான பாரமாக பயன்படுத்தவும்
(இங்கு பெயர்களைப் பூர்த்தி செய்யவும்)

| | |
|---|---|
| 1. | 6. |
| 2. | 7. |
| 3. | 8. |
| 4. | 9. |
| 5. | 10. |

விடை அனுப்பும் பாரங்களில் ‘சிசர்ஸ் போட்டி’ என்று குறிப்பிட்டிருக்க வேண்டும். அவற்றை இம்பீரியல் டுபாக்கோ கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட்டின் அலுவலகங்கள் ஏதேனும் ஒன்றுக்கு தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கலாம்.

தபால் பை எண் 5029 மதராஸ்-1 தபால் பெட்டி எண் 12, விசாகப்பட்டினம் 1. தபால் பெட்டி எண் 1620 கோயமுத்தூர்-18.

தயவு செய்து பெரிய எழுத்துக்களில் எழுதவும்

பெயர் ..............................

முகவரி ..............................

..............................

..............................

வயது .............. தொழில் ..............

# கண்ணீரும் செந்நீரும் சிந்தி வளர்த்த கழகம் இது!

## எதிரிகளுடைய எண்ணத்தை முறியடித்து பாறைபோல் நிற்போம்!

### நம்மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையை நிறைவேற்றுவோம்

### கழகத் தோழர்கட்கு அமைச்சர் கே. ஏ. மதியழகன் உருக்கமான அன்பழைப்பு

சென்னை, அக். 4—

"கண்ணியம் -- கடமை காப்போம்; நமக்குள் ஆயிரம் விவகாரங்கள் -- வேறுபாடுகள் இருக்கலாம்; நாம் ஒரு முடிவுக்கு வந்துவிட்டோமானல், அதை நிறைவேற்ற இலட்சக்கணக்கான தம்பிமார்கள் இருக்கிறார்கள்!

'மகிழ்ச்சிக் குறைவு என்பதே இருக்கக்கூடாது; திர ஆலோசித்த பின் -- விவாதித்தபின், எடுத்த முடிவுகளே இவை! எனவே, இராணுவ வீரனுக்குள்ள கட்டுப்பாட்டுடன் நடந்துகொள்வோம்!

"கண்ணீராலும் செந்நீராலும் கொட்டி வளர்க்கப்பட்டது இக்கழகம்! சிறைச்சாலைகளில் வாடியவர்கள ஏராளமானோர்! குடும்பங்களை அழித்துக்கொண்டவர்கள் பலர்! வாலிபத்தின் வசந்தத்தைப் பாழ்படுத்திக் கொண்டவர்கள் ஏராளமானோர்!

"மக்கள், தங்கள் வாழ்வு உயருவதற்குக் கழகத்தை ஓர் ஆயுதமாகக் கொண்டனர் -- இதை, கற்பாறைபோல காத்திடுவோம்!

"எங்கேயாவது பிளவு -- வெடிப்பு ஏற்படாதா என்று எதிர்பார்ப்பவர்கள் இருக்கிறார்கள்! அவர்களுக்கு இடமளிக்காமல் கற்பாறைபோல நிற்போம்!

"நாம் சார்ந்துள்ள கழகமும், தோழமைக் கட்சிகளும் வெற்றிபெற உழைப்போம்! மன ஆசாபாசங்களுக்கு இடம் கொடுக்காமல் அண்ணா அளிக்கும் தூய பணிக்கு நாம் நம்மை ஒப்படைத்துக்கொள்ளுவோம்!"

இவ்வாறு அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள், எழும்பூர் நாவலர் மன்றச் சார்பில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றுகையில் கேட்டுக்கொண்டார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது :—

"மாநகராட்சித் தேர்தலில் கழகம் போட்டியிடுகின்ற அத்தனை இடங்களிலும் வெற்றி பெறும் என்று குறிப்பிடப்படுவது, வேடிக்கையானதல்ல.

"ஏற்கனவே கழகம், நாடாளுமன்றத் தொகுதிகள் 25-ல் போட்டியிட்டு, அத்தனைத் தொகுதிகளிலும் வெற்றி பெற்றிருக்கிறது.

"இது, இலாப -- நட்டக் கணக்குப் பார்க்கும் நேரமல்ல! மாநகர மக்கள் அளிக்க இருக்கின்ற மகத்தான வெற்றிக்கு நம்மை நாம் ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டிய நேரம் இது!

"தமிழ்நாட்டு மக்கள், தங்களை வழி நடத்திச் செல்லும் பெரும் பொறுப்பினை கழகத்திடம் விட்டிருக்கிறார்கள்! அண்ணா அவர்களிடத்தில் தமிழ் மக்கள் அசையாத நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள்! எனவே, நம்மை நாம் தயாராக்கிக்கொள்ள வேண்டும்.

"மாநகராட்சித் தேர்தலைப் பொறுத்தமட்டில், கழகத்துக்கு ஏற்கனவே இரண்டு தேர்தல்களில், மாநகர மக்கள் வெற்றி அளித்திருக்கிறார்கள்; இது, மூன்றாவது தேர்தல் -- வெற்றி பெற்றிடுவோம் என்றாலும், மெத்தனமாக நாம் இருந்துவிடக் கூடாது!"

## குழுக் கூட்டம்

சென்னை 10-வது வட்ட தி.மு.க. ஊழியர் கூட்டம், 5—10—68 இரவு 9-மணிக்கு மணிகண்ட முதலி 7-வது தெரு, 4-எண்ணுள்ள இல்லத்தில் நடைபெறும்; கழகத் தோழர்களும், துணை மன்றத் தோழர்களும் கலந்துகொள்ளுமாறு துணைச்செயலாளர் ந. இராசமன்னார் கேட்டுக்கொள்கிறார்.

---

கல்வி -- தொழில் அமைச்சர்

## இரா. நெடுஞ்செழியன்

### சுற்றுப்பயணம்

அக். 6 மாலை 4-மணி: சங்கொலி குப்பம்—பேருந்து நிலையம் வானொலி மன்றம் திறப்பு விழா; 5-30 மணி: திருவந்திபுரம்—கழகப் பணிமனைத் திறப்பு விழா; 6-15 மணி: மஞ்சை நகர் அரசினர் மகளிர் உயர் நிலைப் பள்ளிக் கட்டிட அடிக்கல் நாட்டு விழா; 7-மணி: மஞ்சை வெளி புனித சூசையப்பர் உயர் நிலைப் பள்ளித் திறந்த வெளி அரங்கு அடிக்கல் நாட்டு விழா; 8-மணி: அண்ணா பிறந்த நாள் விழா.

அக். 7 மாலை 4-மணி: குடந்தை-அரசினர் ஆண்கள் கல்லூரி அரங்கு பட்ட மேற்படிப்புப் பகுதி சட்டிடத் திறப்பு விழா; 5-30 மணி: குடந்தை-அரசினர் பெண்கள் கல்லூரி புதிய கட்டிடத் திறப்பு விழா; இரவு 7-30 மணி: குடந்தை-பெண்கள் கல்லூரிக் கட்டிட நிதிக்கான நாட்டிய விழாவுக்குத் தலைமை.

---


## கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட்

மூங்கில்துறைப்பட்டு & அஞ்சல்,
கள்ளக்குறிச்சி வட்டம், தென்னாற்காடு மாவட்டம்

### லாரிகள் தேவை

1968-69-ம் பருவத்தின் கரும்பு அறைப்பு நவம்பர் மாத மத்தியில் துவங்கி மே மாதம் முடிய நீடிக்கும். ஆலைக்குக் கரும்பு ஏற்றிவர லாரி சொந்தக்காரர்களிடமிருந்து ஒப்பந்தங்கள் கோரப் படுகின்றன.

#### வாடகை விகிதங்கள்

1 முதல் 15 மைல் வரை டன்னுக்கு ரூ. 6.75.

16 முதல் 25 மைல் வரை மேற்கொண்டு ஒவ்வொரு மைலுக்கும் டன்னுக்கு 25 பைசா கூடுதலாகும்.

26 முதல் 31 மைல் வரை மேற்கொண்டு ஒவ்வொரு மைலுக்கும் டன்னுக்கு 20 பைசா கூடுதலாகும்.

32 மைல் முதல் மேற்கொண்டு ஒவ்வொரு மைலுக்கும் டன்னுக்கு 15 பைசா கூடுதலாகும்.

ஒவ்வொரு நடைக்கும் குறைந்தபட்சம் 6 டன் வாடகை கொடுக்கப்படும். தொடர்ச்சியாக 7 நாட்களுக்கு ஓடிய பின்னும் நாள் வருமானம் ரூ. 105-க்குக் குறைந்தால் சராசரி தினம் ரூ. 105-ம் குறைந்தபட்ச வாடகை வருமானம் உத்தரவாதம் அளிக்கப்படும்.

மேலும் ஆலையில் வாடகைக்கு அமர்த்தப்படும் தேதியிலிருந்து பருவ இறுதிவரை ஓடும் லாரிகளுக்கு மொத்த வாடகை வருமானத்தில் 3 சதம் போனஸ் கொடுக்கப்படும்.

விருப்பமுள்ள லாரி சொந்தக்காரர்கள் 16-10-1968-ந் தேதி, ஆலை அலுவலகத்திற்கு ரூ 2.50 ஸ்டாம்பு காகிதத்துடன் வந்து ஒப்பந்தம் செய்துகொள்ளலாம். காரணம் காட்டாமல் ஒப்பந்த மனுக்களை நிராகரிக்கப் பொது நிர்வாகிக்கு அதிகாரமுண்டு.

பொது நிர்வாகி


---

## கருநாடக மாநில தி. மு. க. அமைப்புக் குழு தேர்தல்

ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளதற்கேற்ப, கருநாடக மாநில தி. மு. க. அமைப்புக் குழுத் தேர்தல், 6—10—68 ஞாயிறு காலை 10-மணிக்கு பெங்களூர்—மல்லேசுவரம் நியூ கிருஷ்ண பவன் மாடியில் தலைமைக் கழகச் சார்பான ஆணையாளர் திரு. நீலநாராயணன் (சென்னை மாவட்டச் செயலாளர்) அவர்கள் தலைமையில் நடைபெறும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

---

### அண்ணா உடல் நிலை:

# ஒரு மணி நேரம் பூங்காவில் உலவினர்

## ஓய்வு நேரத்தைப் புத்தகம் படிப்பதிலே கழிக்கிறார்

### சனியன்று உடல் பரிசோதனை நடைபெறும்

சென்னை, அக். 3—

அறிஞர் அண்ணா அவர்கள், அமெரிக்காவில் உள்ள ஐ. நா. வின் இந்திய நிரந்தரத் தூதுவரான திரு. பார்த்தசாரதி அவர்கள் இல்லத்திலிருந்து 10 மைல் தொலைவிலுள்ள மத்திய பூங்காவுக்குச் சென்று அங்கு ஒரு மணி நேரம் கழித்துவிட்டுத் திரும்பினார். பூங்காவில் அண்ணா அவர்கள் சிறிது நேரம் உலவினர்கள்.

இன்று பொதுப்பணி அமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள், இரா. செழியன், க. இராசாராம் ஆகியோருடன் தொடர்பு கொண்டபோது இத்தகவலை அவர்கள் கூறினர்.

வரும் சனிக்கிழமையன்று டாக்டர் மில்லர், அண்ணாவின் உடலைப் பரிசோதிப்பார். இப்போது உட்கொண்டுவரும் உணவு, அவர் உடல் நலனுக்கு எவ்வாறு ஒத்துவருகிறது என்பதைக் கவனிப்பதே இப்பரிசோதனையின் நோக்கமாகும்.

பரிசோதனைக்குப் பின்னர் எப்போது தமிழகம் திரும்பலாம் என்பது குறித்து டாக்டர் மில்லர் தெரிவிப்பார்.

இட்டிலி போன்ற அதிகக் காரமில்லாத உணவையே அண்ணாவுக்குக் கொடுத்து வருகின்றனர்.

நூல்கள் படிக்கத் தமக்கிருந்த வேட்கைக்கேற்ப இப்போது கிடைத்துள்ள ஓய்வை அண்ணா பயன்படுத்திக் கொள்கிறார்.

அண்ணாவின் உடல்நிலை மிக நன்றாக இருக்கிறது; நிதானமாக அவர் செயல்படத் தொடங்கியுள்ளார். அவரே எல்லா வேலைகளையும் செய்துகொள்ள விரும்புகிறார்; அவருக்கு உதவியாக யாரும் செல்வதை அவர் விரும்பவில்லை.

---

திராவிட முன்னேற்ற கழகத்திற்காக' திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அறிவகம் அச்சகத்தில் (24, [illegible] தெரு, சென்னை-2) [illegible] வெளியிடப்படுகிறது.

### நாடுகள்

"இன்னல்களிலிருந்தும், வேதனையிலிருந்தும்தான் நாடுகள் பிறக்கின்றன."

—காந்தியார்

---

## நடக்க இருப்பவை

### 5--10--68

**ஆவாஜிபேட்டை**

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு; தலைவர்: இராமச்சந்திரனார்; பேசுவோர்: சட்ட அமைச்சர் செ. மாதவன், கா. வேழவேந்தன், டி. கே. பொன்னுவேலு, ஆ. கிருட்டினன் பி.ஏ., து. எத்திராசன், எம். செல்வராசு, ஏ. பரந்தாமன், வி. சி. பஞ்சாட்சரம், கதிர்வேலு, கி. துரைராசு, சுந்தரம், பு. செல்வராசு பி.எஸ்சி., பி.எல்.

---

## ஆந்திர மாநில தி. மு. க. தேர்தல்

### தள்ளிவைப்பு

5—10—68 அன்று நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்த ஆந்திர மாநில தி. மு. க. அமைப்புக் குழுத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

அடுத்து நடைபெறும் நாள் மற்றும் விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

—தலைமைக் கழகம், தி.மு.க.

---

### கலை நிகழ்ச்சி

சென்னை 38-வது வட்ட தி. மு. க. வேட்பாளரை ஆதரித்து குமாரி விஜயாவின் கலை நிகழ்ச்சி 5-10-68 இரவு 7-மணிக்கு வீரப்பன் தெரு சின்னக்கடையம்மன் கோயில் அருகில்—எச். வி. ஹண்டே எம்.எல்ஏ. தலைமையில்—பி. சிட்டிபாபு, குலாப்சர் ஆகியோர் முன்னிலையில் நடைபெறும்.

---


### தமிழக மின்சார வாரியம்

## டெண்டர் விளம்பரம்

"எண்ணூர் அனல் மின்சாரத் திட்டம்—மின் கட்டுப்பாட்டு அறை—கட்டடம் கட்டுதல்"

ஸ்பெசிபிகேஷன் C. 1053

1. "எண்ணூர் அனல் மின்சாரத் திட்டம் மின் கட்டுப்பாட்டு அறை கட்டடம் கட்டுதல்—ஸ்பெசிபிகேஷன் C. 1053" என்று உறையின்மீது எழுதப்பட்ட முத்திரையிட்ட டெண்டர்கள் இரண்டு நகல்களில் 1968 அக்டோபர் 30-ந் தேதி புதன்கிழமை நண்பகல் 12-மணிவரை தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாக, கீழ்க் கையொப்பமிட்டுள்ளவரால் பெற்றுக் கொள்ளப்படும். டெண்டர்கள் அதே தினத்தன்று மாலை 2-30 மணிக்கு கீழ்க் கையொப்பமிட்டுள்ளவரின் அலுவலகத்தில் வந்துள்ள டெண்டர்தாரர்களின் அல்லது அவர்களது பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். தாமதமாகப் பெறப்பட்ட டெண்டர்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

2. ஸ்பெசிபிகேஷன் C. 1053 நகல் ஒன்றின் விலையான ரூ 30 (ரூபாய் முப்பது மட்டும்) ரொக்கமாகவோ அல்லது மணியார்டரிலோ, சென்னை-2, மவுண்ட் சாலை 157 எண்ணிலுள்ள சென்னை மின்சாரத் திட்டம் (வினியோகம்) 'அக்கவுண்ட்ஸ் ஆபீசர்' அவர்களுக்குச் செலுத்திப் பெறப்பட்ட இரசீதை இணைத்து விண்ணப்பித்துக் கொள்வதின்பேரில் ஸ்பெசிபிகேஷன் C. 1053 நகல்களைக் கீழ்க் கையொப்பமிட்டுள்ளவரின் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். சென்னை மின்சாரத் திட்டம் (வினியோகம்) 'அக்கவுண்ட்ஸ் ஆபீசர்' அவர்களுக்கு மேற்படி தொகை செலுத்தும்போதும், மற்றும் எல்லாக கடிதப் போக்குவரத்திலும் ஸ்பெசிபிகேஷன் நெ. C. 1053 என்று தெளிவாகக் குறிப்பிட வேண்டும். மேற்படி தொகை எக்காரணத்தைக் கொண்டும் திரும்பப் பெறக்கூடியதல்ல.

3. குறைந்த அல்லது எந்த டெண்டரையோ ஏற்றுக்கொள்வதற்கு தமிழ்நாடு மின்சார வாரியம் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளாது. இதற்கான எக்காரணமும் காட்டாமல் எந்த டெண்டரையும் அல்லது எல்லா டெண்டர்களையும் நிராகரிக்கவும் மற்றும் வேலையைப் பிரித்து ஒன்றுக்கு மேற்பட்ட டெண்டர்தாரர்களுக்கு வேலையை வழங்கவும் இவ்வாரியத்திற்கு உரிமை உண்டு.

மேற்பார்வை பொறியாளர்,
தொழில் நுட்பம் (பொதுவியல்)
157, மவுண்ட்சாலை, சென்னை-2.